கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.
முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 2ஆம் நாள் திங்கட்கிழமை

**I.A.No.2/2025 in I.A.No.1/2024 in HMOP.No.178/2023**

சங்கீதா . . . மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிராக/

பாலகிருஷ்ணன் . . . எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 21.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வெற்றிசெல்வராஜ் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.எழில்மாறன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்று வழக்கை மேல்நடத்த உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் மனுவில் மனுதாரர் என்றும், மேற்படி எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக பல தவறான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் விவாகரத்து பெறுவதற்காக மேற்கண்ட முதன்மை மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் இடைக்கால பராமரிப்பு தொகை பெறுவதற்காக மனுதாரர் 2024 ஆம் ஆண்டின் IA.1/2024 மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் 2023ம் ஆண்டு மனுதாரர் Right Leaking Ectopic Pregnancy யால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அது 05.07.2023 அன்று மருத்துவ பரிசோதனையின் மூலம் உறுதி செய்யப்பட்டது என்றும், அதன் பின்னர் அதை அகற்றாவிட்டால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று மருத்துவர்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.02 18:24:22 +0530

அறிவுறுத்தினார் என்றும், அதன்பின் அதே தேதியன்று இரவு சுமார் 11.00 மணியளவில் எதிர்மனுதாரர் மனுதாரரை தன் பெற்றோரின் இல்லத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், பின்னர் அதிக வயிற்று வலி ஏற்பட்டதின் காரணமாக மனுதாரர் காஞ்சிபுரத்திலுள்ள உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் 06.07.2023 அன்று அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும், எனவே மனுதாரரால் முன் போல் நடக்கமுடியவில்லை என்றும், எப்போதும் அமர்ந்த நிலையிலேயே இருக்க வேண்டியுள்ளது என்றும், எனவே மனுதாரரால் எவ்வித வருவானமும் ஈட்டமுடியவில்லை என்றும், எதிர்மனுதாரர் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.1,03,450/– மாதம் சம்பாதிக்கிறார் என்றும், எதிர்மனுதாரர் தற்போது Value Labs நிறுவனத்தில் டிசம்பர்2021 முதல் இன்றுவரை பணியாற்றி வருகிறார் என்றும், இவ்வழக்கின் எதிர்மனுதாரர் தற்போது வருடத்திற்கு ரூ.27 லட்சம் வருமானம் பெற்று வருகிறார் என்பது தெளிவாக நிரூபிக்கப்படுகிறது என்றும், மேலும் மேற்கண்ட அனைத்து ஆவணங்களும் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்களாக இருப்பதால் எதிர்மனுதாரர் போதுமான அளவு வருமானம் பெற்று வருகிறார் என்ற வாதத்தை நிலைநிறுத்துவதற்காக அவற்றை கூடுதல் ஆவணங்களாக ஏற்க வேண்டி மனுதாரர் பரம் மனு தாக்கல்.

## 3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம்

மனுதாரரின் மனு பொய்யானது, மோசவிதமானது என்றும், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரர்/எதிர்மனுதாரர் ரிசீவ் செய்ய வேண்டுமென தாக்கல் செய்துள்ள 07.07.2023 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி குறித்து இவ்எதிர்மனுதாரர்/மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், மனுதாரர்/எதிர்மனுதாரர் ரிசீவ் செய்ய வேண்டுமென தாக்கல் செய்துள்ள 2 முதல் 7 வரை கண்டுள்ள ஆவணங்கள் அவருக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்கின்ற விவரத்தினை தெரியப்படுத்த வேண்டியது மனுதாரர்/எதிர்மனுதாரரின் கடமையாகும் என்றும், மேற்படி 2 முதல் 7 வரை கண்டுள்ள ஆவணங்கள் அனைத்தும highly confidential report என்றும், அவ்வாறு இருக்கையில் மேற்படி ஆவணங்களை மனுதாரர்/எதிர்மனுதாரர் எவ்வாறு



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.02 18:24:29 +0530

டவுன்லோடு செய்தார் என்கின்ற விவரங்களை நீதிமன்றத்திற்கு கட்டாயமாக தெரியப்படுத்த வேண்டும் என்றும், மேற்படி ஆவணங்களை மனுதாரர்/எதிர்மனுதாரர், எதிர்மனுதாரர்/மனுதாரருடன் வாழ்ந்த காலத்தில் அவருக்குத் தெரியாமல் அவருடைய அலுவலக ஆவணங்களை டவுன்லோடு செய்தாரா? அல்லது எதிர்மனுதாரர்/மனுதாரரின் மெயில் ஐடியை அவருடைய அனுமதி இல்லாமலும், அவருக்குத் தெரியாமலும் பயன்படுத்தி டவுன்லோடு செய்தாரா? என்கின்ற விவரங்களை தெரியப்படுத்த வேண்டியது என்றும், அவ்வாறு தெரியப்படுத்தினால் தான் மனுதாரர்/எதிர்மனுதாரர் 2 முதல் 7 ஆவணங்களை தன்னுடைய சுயநலத்திற்காக எவ்வாறு டவுன்லோடு செய்தார் என்கின்ற விவரமும், இவ்வாறு டவுன்லோடு செய்து வைத்திருந்தால் பிற்காலத்தில் பயன்படும் என்கின்ற கெட்ட எண்ணத்தில் டவுன்லோடு செய்யப்பட்டதா? என்கின்ற விவரம் நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றும், திருவண்ணாமலை மாவட்ட சமரச தீர்வு மையத்தில் இவ்எதிர்மனுதாரர் மற்றும் மனுதரர்/எதிர்மனுதாரரை விசாரணைக்கு அழைத்தபோது இவ்எதிர்மனுதாரர், மனுதாரர்/எதிர்மனுதாரர் தன்னுடன் வாழ விரும்பினால் வாழ தயாராக உள்ளதாகவும், ஆனால் மனுதாரர்/எதிர்மனுதாரர் வாழ தயாராக இல்லை எனக்கு கூறிவிட்டு எதிர்மனுதாரர்/மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் மனுவில் வழக்கினை நடத்துவதற்கான எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல் அவரிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்கின்ற கெட்ட எண்ணத்திலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்/எதிர்மனுதாரர் இவ்எதிர்மனுதாரரை சங்கடப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கிலேயே பணிபுரிந்த வேலையை விட்டுவிட்டு தற்பொழுது தன்னுடைய ஜீவனத்திற்கு எந்தவிதமான வசதியும் இல்லை என தவறான தகவல்களைக் கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், உண்மைகளை மறைத்து தவறான சங்கதிகளைக் கொண்டு தாக்கல் செய்துள்ள மனுதாரர்/எதிர்மனுதாரரின் மனுவை இவ்எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து தக்க உத்தரவிட வேண்டி எதிர்மனுதாரர் பரம் எதிருரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.02 18:24:35 +0530

இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் அசல் மனுவில் எதிர்மனுதாரர் ஆவார். எதிர்மனுதாரர் அசல் மனுவில் மனுதாரர் ஆவார். எதிர்மனுதாரர் மனுதாரராக இருந்து இம்மனுவின் மனுதாரருக்கு எதிராக இருவருக்குமிடையே நடந்த திருமணபந்தத்தை ரத்து செய்யவேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்தார். அசல் வழக்கானது மனுதாரர் தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையிலிருந்து வந்த நிலையில் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் மாதம் ரூ.1,00,000/- இடைக்கால ஜீவனாம்சம் வழங்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்தார். மனுதாரர் தரப்பில் தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு ஜீவனாம்ச மனுவினை மேல்நடத்த வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவுடன் எதிர்மனுதாரரின் மாதச்சம்பளப்பட்டியல் உள்ளீட்ட அவர் பணி செய்யும் கம்பெனியின் விவரம் மற்றும் மனுதாரரின் மருத்துவ டிஸ்சார்ஜ் சம்மரி ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் டிஸ்சார்ஜ் சம்மரியைப் பொறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யவில்லை. மற்ற ஆவணங்கள் மனுதாரருக்கு எவ்வகையில் கிடைத்தது என்ற விவரம் மனுதாரர் மனுவில் விளக்கவில்லை என்றும், அந்த ஆவணங்கள் அனைத்தும் Highly Confidential report என்றும், அதனால் மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்த மனுதாரரின் டிஸ்சார்ஜ் சம்மரியை தவிர்த்து மற்ற ஆவணங்கள் மனுதாரருக்கு எவ்வகையில் கிடைத்தது என்று மனுதாரர் தன் மனுவில் விவரித்துக் கூறவில்லை. மேலும் மனுதாரர் தாக்கல் செய்த எதிர்மனுதாரர் சம்மந்தப்பட்ட ஆவணங்களை யார் வழங்கியது என்பது குறித்து எந்தவொரு கையெழுத்தோ அல்லது அலுவலக முத்திரையோ காணப்படவில்லை. மேற்படி ஆவணங்கள் கணினியிலிருந்து பதிவேற்றம் செய்யப்பட்டதாகவே உள்ளது. மேற்படி ஆவணம் கணினி பதிவேற்றம் செய்யப்பட்டதற்கு ஆதாரமாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(b)யின் கீழான சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மனுதாரரின் டிஸ்சார்ஜ் சம்மரி ஆவணத்தை மட்டுமே ஏற்றும் மற்ற ஆவணங்களைப் பொறுத்து ஏற்கத்தக்க வகையில் இல்லை என்பதாலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நீதியின் நலன் கருதி பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.02 18:24:41 +0530

இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது செலவுதொகையின்றி பகுதி அனுமதித்தும், பகுதி தள்ளுபடி செய்தும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.02 18:24:47 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.02 18:24:52 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.